# RECORD OF DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | : | O.S.No. 82/2022 | **CNR No.** | : | TNKI13-000116-2022 |
| **Name** | : | திருப்பதி | **Father's Name** | : | அண்ணாமலை |
| **Witness for** | : | Plaintiff | **Calling** | : | PW2 |
| **Age** | : | 55 | **Village** | : | சின்னாகவுண்டனூர் |
| **Taluk** | : | ஊத்தங்கரை | **District** | : | கிருஷ்ணகிரி |
| **Start Time** | : | 11:15 AM | **End Time** | : | 11:30 AM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 04.02.2025 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

(1) எனக்கு 5 ம் பிரதிவாதி ராஜிகிருஷ்ணனை தெரியுமா என்றால் தெரியும். அவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் நடுப்பட்டியை சேர்ந்தவர் ஆவார். 30.06.2016 தேதியிட்ட கிரைய பத்திரத்தின் ஆவண எண் தெரியுமா என்றால் தெரியாது. ராஜிகிருஷ்ணன் விற்பனை செய்த சொத்தும் சின்னசாமியின் சொத்தும் வெவ்வேறு சொத்துக்கள் என்றால் சரிதான். வாதி சின்னதம்பி என்ற சின்னசாமி இந்த வழக்கில் அவரது வீட்டு சம்பந்தமான ஆவணங்களை தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் அவ்வாறு தான் இருக்கும். வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தும் ராஜிகிருஷ்ணனுக்கு விற்பனை செய்த சொத்தும் வெவ்வேறு சொத்துக்கள் என்றால் சரிதான், ராஜிகிருஷ்ணனுக்கு அங்கு சொத்து எதுவும் இல்லை. வாதிக்கும் ராஜிகிருஷ்ணனுக்கும் எந்த தகராறும் இல்லை என்றால் சரிதான்.

(2) நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான் 3ம் வகுப்பு வரை படித்துள்ளேன், எழுதப்படிக்க தெரியும். எனது முதல்விசாரணை பிரமாணபத்திரத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தானா என்றால் ஆமாம். எனக்கு தமிழ் எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். எனது முதல் விசாரணை பிரமாணபத்திரம் நான் சொல்லி தயாரிக்கப்பட்டதா என்றால் ஆமாம், அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது முதல்விசாரணை பிரமாணபத்திரத்தில் சொல்லியுள்ள கிரைய பத்திரத்தின் எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் கிரைய பத்திரத்தின் எண்ணை சொன்னேனா என்றால் இல்லை, வழக்கறிஞரே தட்டச்சு செய்துவிட்டாரா என்றால் ஆமாம். எனது பிரமாணபத்திரத்தில் உள்ள முழு விவரங்களும் எனக்கு தெரியாது என்றும் அது வாதி தான் தயாரித்துள்ளார் என்று சொன்னால் சரிதான்.

(3) வாதி எனக்கு வேண்டியவர் என்று சொன்னால் சரிதான், பிரதிவாதியும் எனக்கு வேண்டியவர் தான். வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு விவரங்கள் தெரியாது என்றால் சரியல்ல.

(4) <u>**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**</u>

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai